தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 20.03.2023

# யானைத் தந்தம் வணிகத்திற்கு கட்டுப்பாடு : நமீபியா யோசனைக்கு இந்தியா ஆதரவா ?

## திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி

யானைத் தந்தங்களை விற்பனை செய்வதற்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என நபிபியா நாடு தெரிவித்துள்ள யோசனைக்கு ஒன்றிய அரசு ஆதரவு தெரிவித்துள்ளதா என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கடந்த 20 ஆம் தேதி கேள்வி எழுப்பினார்.

**இது தொடர்பாக மக்களவையில் உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் துஷ்யந்த் சிங் ஆகியோர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

யானைத் தந்தங்கள் வணிகத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என நமீபியா நாடு தெரிவித்துள்ள யோசனைக்கு ஒன்றிய அரசு ஆதரவு தெரிவித்துள்ளதா? அவ்வாறு ஆதரவு தெரிவித்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றால் தற்போது இருப்பில் உள்ள யானைத் தந்தங்களை என்ன செய்வது என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள வனத்துறையினர் வசம் தற்போது இருப்பில் உள்ள யானைத் தந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் யானைத் தந்த விற்பனையாளர்கள், யானைத் தந்தங்களை வேட்டையாடியவர்கள் ஆகியோரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் பற்றிய விவரம் அந்த யானைத் தந்தங்களின் மதிப்பு ஆகியவற்றையும் ஆண்டுவாரியாகத் தெரிவிக்க வேண்டும்.

யானை தந்தங்களைப் பாதுகாக்கவும் இது தொடர்பான திருட்டுகளைத் தடுக்கவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

**உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் வனத்துறை, சுற்றுச்சூழல், மற்றும் காலநிலை மாறுபாடு துறை அமைச்சர் அஸ்வினி குமார் சௌபே அளித்த பதில் விவரம் வருமாறு:**

1972 ஆம் ஆண்டின் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 49- பி பிரிவின்படி நமது நாட்டில் யானைத் தந்த வணிகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வனவிலங்குகளைப் பாதுகாக்கும் அடிப்படைப் பொறுப்பு மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் வசம் இருந்து வருகிறது. எனவே அதைப் பற்றிய விவரங்கள் ஒன்றிய அரசு வசம் இல்லை.

வனவிலங்குகள் குற்றத்தடுப்பு வாரியத்தின் வசமுள்ள தகவல்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் யானைத் தந்தங்களை வேட்டையாடியோர் மற்றும் அவற்றை விற்பனை செய்தோர் வசமிடமிருந்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசு மற்றும் காவல் துறையினர் பறிமுதல் செய்த யானைத் தந்தங்கள் பற்றிய ஆண்டுவாரியான விவரங்கள் வருமாறு:

- 2018 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் 77.146 கிலோ.

❖ இதே காலகட்டத்தில் வணிகர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்த கைவினைப் பொருள்கள் 21.

❖ 2019 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட யானை தந்தங்கள் 47.133 கிலோ.

❖ இதே காலகட்டத்தில் வணிகர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு யானைத் தந்த பொருள்கள் 126.

❖ 2020 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் 32.39 கிலோ.

❖ இதே காலகட்டத்தில் வணிகர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்த பொருள்கள் 32.

❖ 2021 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் 212.972 கிலோ.

❖ இதே காலகட்டத்தில் வணிகர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்த பொருள்கள் 87.

❖ 2022 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் 105.89 கிலோ.

❖ இதே காலகட்டத்தில் வணிகர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட யானைத் தந்த பொருள்கள் 119.

*****